## சமத்துவச் சமுதாயத்தை நோக்கிய

# நமது பயணத்துக்குத் துணையாக வரும் போற்றுதலுக்குரியவர்கள்!

### மல்லசமுத்திரம் பெரியவர் கணேசன் – வழக்கறிஞர் அன்பழகனுக்கு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!






நாமக்கல்,நவ.26–

நாமக்கல் மாவட்டம் – மல்லசமுத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட ‘ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி அரிசன் காலனி’ எனும் பெயரினை ‘ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, மல்லசமுத்திரம் கிழக்கு’ எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்பது அவ்வூர் மக்களின் கோரிக்கையாக இருந்தது.

இந்நிலையில் ‘ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி, மல்லசமுத்திரம் கிழக்கு’ எனப் பெயர் மாற்றம் செய்வதற்கான அரசாணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நேற்று மல்லசமுத்திரம் கிராமத்திற்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரடியாகச் சென்று ‘அரிசன் காலனி’ எனும் பெயரினை அழித்து, அரசாணையை பள்ளியின் தலைமையாசிரியரிடம் வழங்கினார்.

இதற்காகப் போராடி வந்த ஊர் பெரியவர் கணேசன் அவர்களுக்கும், ஊர் மக்களின் கோரிக்கையை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற வழக்கறிஞர் அன்பழகன் அவர்களுக்கும் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.




இந்நிகழ்வு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு :–

**சமத்துவச் சமுதாயத்தை நோக்கிய நமது பயணத்துக்குத் துணையாக வரும் பெரியவர் கணேசன் – வழக்கறிஞர் அன்பழகன் போன்றோர் போற்றுதலுக்குரியவர்கள்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### நாமக்கல் – மல்ல சமுத்திரத்தில் ‘அரிசன் காலனி’ எனும் பெயரில் இருந்த

# அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி - மல்லசமுத்திரம் கிழக்கு!

## பெயர் மாற்றத்திற்கான அரசாணையை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

நாமக்கல், நவ.26-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஒன்று ‘அரிசன் காலனி’ என்ற பெயரில் இருந்ததை மாற்றம் செய்ய வேண்டும் எனும் ஊர் மக்களின் கோரிக்கையை ஏற்று பள்ளி பெயர் பலகையில் இருந்த ‘அரிசன் காலனி’ என்பதை மாற்றினார்

மேலும் “ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, மல்லசமுத்திரம் கிழக்கு” என பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான அரசாணையை பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் வழங்கி, இதற்காக போராடிய ஊர் பெரியவர் கணேசன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து மகிழ்ந்தார்.

இக்கோரிக்கையை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற வழக்கறிஞர் ஜி.அன்பழகன் ‘ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மல்லசமுத்திரம் கிழக்கு’ எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டதை தெரிவித்தார்.

திடீரென்று மல்லசமுத்திரம் கிராமத்திற்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் வருகை தந்ததால் ஊர்மக்களும், ஆசிரியர்களும் ஒன்று கூடினார்கள். தங்களின் கோரிக்கையை நிறைவேற்ற நேரடியாக வந்ததை அறிந்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்கள். இதுதொடர்பாக தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ‘கல்வி மட்டுமே சமத்துவம் மலரச் செய்யும் மிகப்பெரிய ஆயுதம்’ என கலைஞரின் வரிகளைக் குறிப்பிட்டுள்ளார்.

### மா.சுப்பிரமணியன் – தமிழச்சி தங்கபாண்டியன் – எஸ்.அரவிந்த்ரமேஷ் – நா.சந்திரபாபு பங்கேற்பு!

# சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி தி.மு.க. பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிக் கழகச் செயலாளர் வி.இ.மதியழகன் எம்.சி. தலைமை!

சென்னை, நவ. 26

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி தி.மு.க. பாக முகவர்கள் கூட்டம் இன்று (26.11.2024 செவ்வாய்க் கிழமை) மாலை 5 மணிக்கு, நீலாங்கரை, பி.டி.என். திருமண மண்டபத்தில் பகுதி அவைத் தலைவர் எஸ்.ஜானகிராமன் முன்னிலையில் நடைபெறுகிறது.

சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர், 15 வது மண்டலக் குழுத் தலைவர் வி.இ.மதியழகன் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

இதில் மா.மகேஸ்வரன், ஜி.விஜயகுமார், வி.எஸ்.சுதா, எம்.பாஸ்கரன், கே.குமார், கே.வி.சாந்தப்பன், பி.எஸ்.ஆறுமுகம், ஏ.கே.ஆனந்த், கி.சத்தியவேலன், மாஸ்டர் எஸ்.கர்ணா, க.ஏகாம்பரம், டி.சீனிவாசன், பி.என்.ஜோதி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ், சோழிங்கநல்லூர் தொகுதி பார்வையாளர் நா. சந்திரபாபு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் பாலவாக்கம் க.சோமு, பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வி.எட்டியப்பன், எம்.கே.ஏழுமலை, ஆ.அரிகிருஷ்ணன், ரத்னா லோகேஷ்வரன், கா.வீ.தியாகராஜன், பா.அருண்குமார், எம்.பார்த்திபன், த.விஜயபாலன், கி.ஸ்டாலின் மொழி மற்றும் பகுதி கழகத்துக்குட்பட்ட அனைத்து பாக முகவர்களும், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.





கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்குமாவட்டம், மாநகர மாணவரணி அமைப்பாளர் ந.ஸ்ரீதர் ஏற்பாட்டில் ரத்த தான முகாமை தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் வீரமணி, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், பகுதி கழக செயலாளர்கள் அக்னி டி.சந்திரசேகரன், பொ.ராமச்சந்திரன், குறிஞ்சி என்.தண்டபாணி கே.சந்திரசேகரன் மாவட்ட அமைப்பாளர் சரளை ராசு, சி.ஏ.கார்த்திகேயன், மாநகர துணை அமைப்பாளர்கள் தனராஜா, விஜயகுமார், மணிகண்டன், நல்லசிவம், கனிமொழி நடராஜன், பழனிச்சாமி, தொமுச சுந்தர்ராஜன், உதயகுமார், எட்வின், கணேசன், வீரமுருகன், சுரேஷ்குமார், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திராவிடத்தின் மலர்ச்சியே பல்லாண்டு வாழ்க!



உதயநிதி ஸ்டாலினே
தென்னிந்திய
நல உரிமைச் சங்கத்தின்
தராசு - நீ !

ஒரு தட்டில் தாத்தா
ஒரு தட்டில் அப்பா
சரியாக நிற்கும்
தராசு முள் -- நீ !

எண்ணைச் சுற்றாமல்
தமிழ்
மண்ணைச்சுற்றும்
கடிகார முள் - நீ !

திராவிடர் கழகத்தின்
நான்காம் தலைமுறை
குடியரசுப் பதிப்பு - நீ !

பெரியாரிடம்
வசிப்பவன் - நீ !
அறிஞர் அண்ணாவை
சுவாசிப்பவன் - நீ !

மானின் கூச்சம்
புலியின் பாய்ச்சல்
அணுகுவோரைப் பொறுத்து
இரண்டுமாய் இருப்பாய் - நீ !

சி.ஏ.ஏ. சட்டத்திற்கு எதிராக
போரில் குதித்தாய்..!
நீட் தேர்வுக்கு எதிராக
தீயாய் கொதித்தாய் !

மதவெறியர்கள்
உன் தலைக்கு
விலை சொன்னபோதும்
ஆதிக்கத்தை
சிதைத்தவனே !

சாதி வெறியை
வெடிபோட்டு
கிழித்தவனே !

கலைஞரிடம்
எழுதுகோலை எடுத்தவனே !
துணை முதலமைச்சராகி
அந்த எழுதுகோல்
பிடித்தவனே !

நீ ஒரு சொல் வீசினால்
திராவகம் அவர்களுக்கு !
ஆனால்
திராட்சைச் சாறு
திராவிடருக்கு !

யாரைப் போலவும் இல்லை
நீயாகவே
இருக்கிறாய் நீ !
விழுந்து கிடக்கும்
நிலா நிழல் அல்ல
அறிவியல் கலந்த
அரசியல் நீ !

இட ஒதுக்கீட்டை
காப்பாற்றவே
உன் தொடர் வண்டி ஓடும் !

பெண் உரிமைக்கு எதிராக
பறக்கும் கொசுக்கள்
உன் மூலிகைப் புகைபட்டு
ஓடும் !

உழைப்பில்
காவிரி - நீ !
வியப்பில்
கல்லணை - நீ !

சாலைகளில்
அண்ணா சாலை
நீ !
நூல்களில்
நெஞ்சுக்கு நீதி
நீ !

மறம் கொடுப்பதில்
அம்பேத்கர் மொழி !
அறம் கொடுப்பதில்
அறிஞர் அண்ணா வழி !

உன் இளைஞர் படையில்
அயோத்தி தாச பண்டிதர்
டாக்டர். சி. நடேசனார்
சர். பிட்டி. தியாகராயர்
டி. எம். நாயர்
களத்தில் இருக்கிறார்கள் !
உன்னைக் குறி வைத்து
அம்பு வீசியவர்கள்
தோற்கிறார்கள் !

நீ கோபாலபுரத்தின்
அடிக்கல் !
முன்னேறும் இளைஞர்களுக்கு
படிக்கல் !

உன் மீது வீசினார்கள்
விமர்சனக்கல் !
அவைகளை நொறுக்க
நீ தூக்கியது செங்கல் !

உன் நடமாடும் நூலகத்தை
புகழ்கிறது திருவல்லிக்கேணி !
நீ அள்ளிக் கொடுப்பதில்
வியக்கிறது திருஅல்லிக்கேணி !
எளியவர்களின்
கழிவறையில்
உன் கால்கள் பட்டது !
சிவப்பு கம்பளம்
உன் கால்களை
முத்தமிட்டது !

மழை கொட்டியது
நள்ளிரவு !
குடை எடுப்பதற்குள்
உன் வரவு !

கலை உலகில்
தாத்தா அப்பா போல
வெல்லுகிறாய் !
பன்றி வளர்க்கும் கதாபாத்திரத்தில்
நடித்து சமூக நீதி அரசியல்
சொல்லுகிறாய் !

சாதி மதம் சாஸ்திரம் அதிகாரம்
அனைத்துக்கும்
எதிரானது உன் தடம் !

எப்போதும்
பண்பில் நீ
பள்ளிக்கூடம் !

இளைஞனே இவன்
நெய்த துணியைத்
தரி !
இவன் ஒருவனே
சுயமரியாதைத்
தறி !

ஆணையிடும்
இவன் விரல் நுனி !
வரலாறு படைக்கும்
இளைஞர் அணி !

மனுதர்மத்தை மறுத்து
சம தர்மத்தை
சொல்லுகிறார் ஒப்புவி !
சக்கர வியூகத்தை
வெல்லுகிறார்
சொல்லுது பார் இப்புவி !

இவன் 100 கலைஞர் என்று
உன் குரலை உள்வாங்கி
வெளிப்படுத்தும் போது
சொல்லுகிறது ஒலிவாங்கி !

இனி நூற்றாண்டுகளை
கடந்தும் இனம் காக்க
நீதானே தமிழ்த் தாங்கி !

பேச்சில் மணிப்புறா
சிறகே !
சிரிப்பில் செங்காந்தள்
அழகே !

தலை வணங்காத
பனைகளின் வனப்பே !
நடந்தால்
வெண் புலியின் அணிவகுப்பே !

இலட்சம் பறவைகளுக்கும்
திசையை தீர்மானிக்கிறாய்
ஆகாயத்தில் !

இந்தி தெரியாது போடா
என்று பனியன் போட்டு
உயர்ந்தாய் தமிழ் வானத்தில் !

கொள்கையில்
உதயநிதி ஸ்டாலின்
முழுப்பரிதி !
அவர் தம்பிகள்
சூரியனின் உதிரி !

சமூகப் பணிகளில்
விடுதலை நீ !
இந்தியை எதிர்ப்பதில்
முரசொலி நீ !

நட்சத்திரங்களுக்கு
தலைமை தாங்கும்
ஒரே நிலா நீ !

நூறாண்டுகள் கடந்தும்
நலமுடன்
வாழ்வாய் நீ !



கவிஞர் **ஈரோடு இறைவன்**
கழக இலக்கிய அணி இணைச் செயலாளர்